**DECEMBER 2024** **P/ID 35325/PTL3R**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்கட்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. நுண்கலை - சொற்பொருள் கூறுக.

2. வரலாறு என்பது யாது?

3. கம்பனும் மில்டனும் என்னும் நூலை எழுதியவர் யார்?

4. திருக்குறள் - பெயர்க்காரணம் தருக.

5. கலிப்பாவின் ஓசை எது?

6. எண் வகை மெய்ப்பாடுகள் யாவை?

7. ஆற்றுப்படுத்தல் என்றால் என்ன?

8. இயற்கைப் பூதங்கள் யாவை?

9. சிந்தாமணி காப்பியத் தலைவன் யார்?

10. குடிமக்கள் காப்பியம் எது?

11. வள்ளலாரின் இயற்பெயர் என்ன?

12. புதிய ஆத்திசூடியை எழுதியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்கட்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. இலக்கிய வகைமை பற்றி நீர் அறிவன யாவை?

14. திருவாசகத்தின் நாட்டுப்புறக் கூறுகளை வெளிப்படுத்துக.

15. காரண காரிய இயைபு குறித்து எழுதுக.

16. தாக்கக் கொள்கை பற்றி விளக்குக.

17. தேசிய இலக்கியம் - விளக்குக.

18. ஒரு மொழி இலக்கிய ஒப்பீட்டின் தேவையை வலியுறுத்துக.

19. குறவஞ்சி, பள்ளு ஆகியன மக்கள் கலை இலக்கியம் ஆகுமா? விவாதிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்கட்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. இலக்கியத்தைப் பிற துறைகளுடன் ஒப்பிட வேண்டியதை வலியுறுத்துக.

21. ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு உதவுமாற்றை மதிப்பிடுக.

22. தன்னுணர்ச்சிப் பாடல் எவ்வாறு அமையும்?

23. அமெரிக்க ஒப்பிலக்கியச் சூழலை விளக்குக.

24. காப்பிய உத்திகளை விளக்குக.

———————